

நாளிதழில் மாமன்றம்

ADC 2025

MAKKAL OSAI 08-02-2025

சனிக்கிழமை 8 பிப்ரவரி 2025 மக்கள் ஓசை M

பால்குடம் எடுக்கும் பக்தர்களின் வசதிக்காக

தர்மவேல் திட்டம்

மலேசிய இந்து தர்ம மாமன்றம் ஏற்பாடு



டில்லிராணி முத்து

கோலசிலாங்கூர், பிப். 8- வரும் 11.2.2025 ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று நடைபெறவிருக்கும் தைப்பூசத் திருவிழாவில் பால்குட நேர்த்திக் கடனைச் செலுத்தவிருக்கும் பக்தர்களின் வசதிக்காக மலேசிய இந்துதர்ம மாமன்றம் கடந்தாண்டு கள் போல் இவ்வாண்டும் தர்மவேல் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது என மலேசிய இந்து தர்ம மாமன்றம் கணேச கோட்டம், சிலாங்கூர் மாநிலத் தலைவர் ஜி.கே. நடராஜன் தெரிவித்தார்.

2 1/2 மைல், கோலசிலாங்கூர் ஸ்ரீ சுப்ரமணியர் சுவாமி ஆலயத் தைப்பூசத் திருவிழாவில் நேர்த் திக்கடன் செய்ய வரும் பக்தர்களுக்கு இலவசமாக பூஜைகள் செய்து தரப்படும் என்று குறிப்பிட்ட அவர், பக்தர்கள் பால், குடம், மஞ்சள் துணி ஆகியவற்றை கொண்டு வந்தால் மட்டுமே போதுமானது என்றார்.

எனவே தைப்பூசத் தன்று கோலசிலாங்கூர் வெள்ளைப்பாலம் ஆற்றங்கரையிலிருந்து விடியற்காலை 4.00 மணிக்கு காவடி, பால்குடம் எடுக்கும் பக்தர்கள் பூஜைப் பொருட்களை கொண்டுவர வேண்டியதில்லை. அனைத்து பூஜைப் பொருட்களும் இந்து தர்ம மாமன்றம் சார்பில் தயார் செய்து இந்து மதத்தின் ஆகம முறைப்படி முற்றிலும் இலவசமாக பூஜைகள் செய்து தரப்படும் என அவர் கூறினார்.

மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் இந்த தர்ம வேல் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒரே இடத்தில் பூஜைகள் செய்து பக்தர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்பதாகும். மேலும் பொதுவாகவே பால்குட நேர்த்திக்கடனைச் செய்யும் பக்தர்கள் பூஜைக்கு பழங்கள், வெற்றிலை, பாக்கு, வாழை இலை, அரிசி ஆகிய பூஜைப் பொருட்களை உடன் கொண்டு வருவார்கள். பூஜைக்கு பின்னர் அவர்கள் கொண்டுவந்த அத்தனை பொருட்களையும் ஆங்காங்கே அப்படியே விட்டுச் செல்கிறார்கள்.

இதனால் பல இடங்களில் குப்பைகள் நிறைந்து இருப்பதோடு பூஜைப் பொருட்கள் பலரின் கால்களில் மிதிப்படுகின்றன. எனவே இதனை முற்றிலும் தவிர்ப்பதற்கும் மலேசிய இந்து தர்ம மாமன்றம் நாட்டில் கடந்த 9 ஆண்டுகளாக தைப்பூசத் திருவிழா, பங்குனி உத்திரத் திருவிழா, சித்திரா பௌர்ணமி திருவிழா காலங்களில் மிகவும் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருவதாகவும் நடராஜன் மேலும் தெரிவித்தார்.

அந்நிலையில் நாட்டில் தைப்பூசத் திருவிழா நடைபெறும் பல திருமுருகன் ஆலயங்களில் இந்துதர்ம மாமன்றம் இந்த இலவச சேவைகளை ஏற்பாடு செய்துள் ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே பக்த மெய்யன்பர்கள் இந்த தர்மவேல் திட்டத்தில் வழங்கப்படும் சேவைகளைப் பெற்றுக்கொண்டு மன நிறைவுடன் நேர்த்திக்கடனைச் செலுத்துமாறு மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் சார்பில் ஜி.கே. நடராஜன் கேட்டுக் கொண்டார்.

Tamil Malar 6/12/2024

கல்வியும் ஒழுக்கமும் மாணவர்களின் நம்பிக்கைச் சிறகுகள்:

பேராசிரியர் இராஜேந்திரன் பேச்சு

மகேஸ்வரி

புக்கிட் ரோத்தான், டிச.6-

நேற்று முன்தினம் மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின்(சிலாங்கூர்-பேரா) சார்பில் இங்குள்ள அருள்மிகு சக்தி தேவஸ்தானத்தில் இவ்வாண்டு எஸ்பிஎம் மற்றும் எஸ்டிபிஎம் தேர்வு எழுதும் இந்திய மாணவர்களுக்கு சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றது.

காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையில் நடந்தேறிய இந்நிகழ்வில், சுமார் 250 மாணவர்களும் 100 பெற்றோர்களும் பங்குகொண்ட நிகழ்வு சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டது என்றும் செகிஞ்சான் பாரிட் அம்பாட்டில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தின் பொருளாளர் ஜிகே.நடராஜன் தமிழ் மலரிடம் கூறினார்.

கலந்து கொண்ட மாணவர்களுக்கு இனிப்பு இல்லாத காலை பலகாரம் தேநீர் மற்றும் மதிய நேரத்தில் சைவ உணவும் வழங்கப்பட்டது. மேலும், இந்த நிகழ்ச்சிக்கு பேராதரவு கொடுத்த அனைத்து நல்லோர்களுக்கு இந்த வேளையில் மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் தேசியத் தலைவர் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றி கூறுகிறேன் என்றார்.



தவிர, மாணவர்களுக்கு கல்வி மற்றும் நம் இந்து சமயம் குறித்து விளக்கம் அளித்துள்ள மாமன்றத்தின் ஆலோசகரும் பேராசிரியருமான என்.எஸ். இராஜேந்திரன் பேருரையும் மற்றும் சிவஶ்ரீ அ.ப.முத்துகுமார் குருக்களின் ஆசியும் பெற்ற நிகழ்வாக மாணவர் சமுதாயத்திற்கு அமைந்தது.





இந்நிலையில், இராஜேந்திரன் பேசுகையில், நாட்டின் வளர்ச்சியில் பல தரவுகளை எடுத்துக் கொண்டால், நம் நாட்டைப் பொறுத்தவரை தேசியக் கோட்பாடான ருக்குன் நெகாரா நாட்டுப்பற்றுடன் வழி நடத்தும் முதன்மையாகத் திகழ்கிறது என்றார்.

தவிர, கல்வி மற்றும் சமயமும் அது சார்ந்த ஒழுக்க நெறியுமே மாணவர்களை பண்பு நிறைந்தவர்களாக செதுக்கும் சிறப்பியாகும். திருவள்ளுவரும் ஒழுக்க நெறியைப் பின்பற்றி சமுதாயத்தோடு இணைந்து வாழாதோர் எவ்வளவு கற்றாலும் அவர்கள் கல்லாதவர்கள் என்று கூறுகின்றார்.

பிள்ளைகள் தங்கள் நடத்தையில் கட்டொழுங்கினைப் பின்பற்றி நடப்பதில் பெற்றோர்களுக்கு அதிகப் பொறுப்பு உண்டு. அதனால் நம் சமயத்தின் அடையாளத்தையும் சிறு வயது முதலே ஊட்டி வளர்க்க வேண்டும் என்றும் பேராசிரியர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு உதாரணமாக நானே உங்கள் முன்னால் இருக்கின்றேன். நானும் தோட்டப்புறத்தில் பிறந்து வளர்ந்தேன்.

அங்குள்ள தமிழ்ப்பள்ளியில் கல்விக்கற்றேன். கூடவே சமயத்தையும் ஒழுக்கத்தையும் பின்பற்றினேன். இன்று ஒரு பேராசிரியராகவும் உள்ளேன் என்று தன்னையே எடுத்துகாட்டாக காட்டிய பேசியபோது மாணவர்கள் வியந்து பார்த்தனர்.

இந்த ஒழுக்கத்தில் என்னை வளர்த்தது தாய் மொழி தமிழ்.

கல்வியில் பேராசிரியராக உயர்த்தியது பெற்றோர்களின் கண்டிப்பு தான் என்பதை உங்கள் முன்னிலையில் பெருமையுடன் கூறுகின்றேன். சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு இறைவன் மீது நம்பிக்கை வைத்தது. அதற்கு ருக்குன் நெகாராவுக்கு தலை வணங்குகிறேன் என்றார்.

மாணவர்களே நீங்கள் அனைவருமே கல்வியில், ஒழுக்கத்தில் சமயத்தையும் கடைப்பிடித்து வந்தால் எதிர்காலத்தில் நீங்களும் நாட்டின் நற்குடி மக்களாக பார்க்கப்படுவீர்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை. இந்நிலையில், எஸ்பிஎம் மற்றும் எஸ்டிபிஎம் பொதுத் தேர்வு எழுதும் உங்கள் எண்ணங்கள் செயல்கள் எனைம் கற்றுணர்ந்த பாடங்களில் செலுத்த வேண்டும்.

தேர்வில் வெற்றியைக் குறித்து உங்கள் மதிப்பெண்கள் காட்டும். அது போன்று நல்ல பிள்ளைகள் என்று சமுதாயம் வழங்கும் மதிப்பெண்களால் தான் உங்கள் வாழ்க்கையை வெற்றியின் சிகரத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றீர்கள். இதற்கு காரணம் பெற்றோர்களே என்பதை மறுக்க முடியாது. இவ்வாறான பெற்றோர்களின் செயல்பாடுகளால் மாணவர்கள் முன்னேற்றம் என்பது உறுதிப்படுத்த முடிகிறது என்றும் அவர் பேசினார்.

அந்நியச் செலாவணிக் கொள்கையின் ... முக்கியமான சலுகை வெளிப்படுத்தப்படுகிறது - இது

தமிழ் மலர்
PP17985/02/2013 (033542)
உண்மையின் உரைகல்
TAMIL MALAR DAILY
24.12.2024 செவ்வாய்க்கிழமை • திருவள்ளுவர் ஆண்டு 2055 • குரோதி ஆண்டு மார்கழி 9 • ஹிஜ்ரி 1446 ஜமாதில் ஆகிர் 22 • மணி 12 இதழ் 142 RM 1.70
www.tamilmalar.my tamilmalar2018@gmail.com Malar TV Malar TV Malar TV Malar TV 03-4044 9999





வங்காளதேசத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான

கொடூரம் கண்டிக்கத்தக்கது

கோலாலம்பூர், டிச.24-

வங்காளதேசத்தில் சிறுபான்மை இந்துக்களுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என தேசிய ஒற்றுமைத்துறை துணையமைச்சர் செனட்டர் சரஸ்வதி கந்தசாமி கூறினார். எந்தவோர் உயிரை கொல்வதும், கொடுமைப்படுத்துவதும் பாவமான மற்றும் காட்டுமிராண்டித்தனமான செயலாகும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் படிக்க...

உலக "சீலாட்"
சாம்பியன்ஷிப் போட்டியில்

தர்மராஜ் வரலாற்றுச் சாதனை



கோலாலம்பூர், டிச. 24-
அபு தாபியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற "உலக பெஞ்சாக் சீலட் சாம்பியன்ஷிப்" போட்டியில் தேசிய பெஞ்சாக் சீலட் வீரர் தர்மராஜ் வேலுசாமி தங்கப் பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மேலும் படிக்க...

கொடூரம் கண்டிக்கத்தக்கது

நேற்று இங்கு ஜாலான் பங்சார் ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயத்தில் வங்காளதேச இந்துக்களுக்காக நடத்தப்பட்ட சிறப்பு பூஜையில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

வங்காள தேசத்தில் வசிக்கும் இந்துக்கள் அந்நாட்டின் பூர்வீக குடிமக்களாவர். அந்நாட்டில் அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு உண்டு என்றார் அவர்.

அவர்களின் மத நம்பிக்கையின் காரணமாக அவர்கள் கொடுமைப்படுத்தப் படுவதாகவும், மரணம் விளைவிக்கப்படுவதாகவும் மற்றும் அவர்களின் உடைமைகள் சூறையாடப்படும் செய்திகள் வந்த வண்ணம் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த கொடூர செயல் நமக்கு வேதனையை தருவதோடு, இந்த செயல் கண்டிக்கத்தக்க ஒன்று என அவர் குறிப்பிட்டார்.

இந்த கொடூர செயலை எதிர்த்து அறிக்கை விடுவது மட்டும் தீர்வாகாது. இது ஆறுதலை தரலாம் மற்றும் நம்பிக்கையை தரலாம். ஆனால் இது ஒரு தீர்வு அல்ல என அவர் சுட்டிக் காட்டினார்.

நமது புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் இதுபோன்ற இன்னல் வரும் போது இறைவனிடம் சரணடைந்தால், ஏதாவது ஓர் உருவில் தோன்றி அநீதி புரிபவர்களுக்கு பாடம் புகட்டி ஒரு முடிவுக்கு கொண்டு வருவதாகக் கூறுகிறது.

இதை அடிப்படையாக வைத்துத்தான் தீபாவளி உட்பட பெரும்பாலான நமது இந்து பண்டிகைகள் கொண்டாடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அவ்வகையில் இந்து தர்மம் சற்பிக்கும் அஹிம்சை வழியிலே வங்காளதேச இந்துக்களுக்காக நாம் இறைவனை பிரார்த்திக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த விவகாரத்தில் நடப்பு வங்காளதேச அரசாங்கம் சிறுபான்மை இந்துக்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த பிரார்த்தனையில் இந்து சங்கம், இந்து தர்ம மாமன்றம், இந்து வழக்கறிஞர்கள் மன்றம், கோப்பியோ பிரதிநிதிகள் மற்றும் மலேசியாவில் வாழும் வங்காளதேச இந்துக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

TAMIL MALAR 02-01-2025



இந்து சமயத்தை இழிவாகப் பேசும் தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

தனி வழக்கறிஞர் குழுவினர் நியமனம் செய்யப்படுவர் –சிவநேசன்

(ஆர்.கிருஷ்ணன்)

ஈப்போ, ஜன. 2-

சமீப காலமாக ஒரு சில பொறுப்பற்றவர்கள் இந்து சமயத்தைப் பற்றி சமூக வலைதளங்களில் இழிவாக பேசி வருகின்றனர். இவர்களுக்கு பாடம் கற்பிக்கும் வகையில் பேராக் மாநில அரசாங்கம் இந்து சமயத்தை இழிவாக பேசும் எந்த தரப்பினர் மீதும் ஆதாரத்தோடு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்தார் பேராக் மாநில இந்திய சமூக நலத்துறை ஆட்சிக்குழு உறுப்பினர் அ.சிவநேசன்.

அண்மையில் தமிழ் நாட்டிலிருந்து சுற்றுலா பயணிகளாக மலேசியாவிற்கு வரும் நபர்கள் பொறுப்பற்ற முறையில் இந்து சமயத்தை பற்றி இழிவாகப் பேசி வந்துள்ளனர். இவர்கள் நாட்டிற்கு நாம் செல்லும் பொழுது இதுபோன்ற முறைகேடான வாக்குவாதங்கள் அல்லது பேசுவது கிடையாது. ஆகவே, இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டிலிருந்து வரும் சுற்றுலா பயணிகள் நாவடக்கத்துடன் பேச வேண்டும். அப்படி முரண்பாடாக செயல்பட்டால் சட்டநடவடிக்கைகள் கண்டிப்பாக மேற்கொள்ளப்படும் என்று அவர் எச்சரித்தார்.

இவ்விவகாரத்தில் மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு பாராட்டு. இவர்களை போன்று மற்ற இயக்கங்களும் செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பொறுத்தது போதும் எவ்வளவு காலம் இந்த பொறுப்பற்றவர்கள் இந்து சமயத்தை இழிவாகப் பேசுவார்கள் ? அனைத்துக்கும் ஒரு முடிவு கட்ட வேண்டும். ஆகையால், இனிவரும் காலங்களில் சட்டநடவடிக்கைகள் மேற்கொண்டால்தான் இவர்களை அடக்க முடியும் என்று அவர் ஆணித்தரமாக கூறினார்.

இங்குள்ள மேடான் இஸ்தானா ஏகேஎஸ் மண்டபத்தில் பேராக் மாநில இந்திய இயக்கங்கள், தமிழ்ப்பள்ளிகள் மற்றும் சீக்கிய சமூகத்திற்கு நிதி வழங்கும் நிகழ்வில் அ.சிவநேசன் தம் கருத்தை பதிவு செய்தார்.



தமிழர்களின் பாரம்பரிய உணவு–விளையாட்டுகளை பறைசாற்றும் பிரமாண்ட தமிழ் புத்தாண்டு விழா

(எஸ்.ஜீவராஜா-ஆர்.குணா)

கோலாலம்பூர், ஏப். 13- தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் விளையாட்டுகள் பற்றிய விவரங்கள் எல்லாம் அரசாங்கத்தின் அரசிதழில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

அதே வேளையில் வருங்கால தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பழஞ்சுவடி காப்பகத்தின் பதிவேட்டிலும் அவை இடம் பெற வேண்டும்.

இதனை வலியுறுத்தும் வகையிலான கோரிக்கை மனு அரசாங்கத்திடன் வழங்கப்படும் என்று தமிழ் புத்தாண்டு விழா ஏற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளரும் இந்து தர்ம மாமன்றத்தின் துணை தலைவருமான ரிஷ்குமார் வடிவேலு கூறினார்.

அதே சமயத்தில் சூத்தி சூத்தி மலேசிய என்ற மலேசிய சுற்றுலா காலண்டரிலும் தமிழ் புத்தாண்டு விழா இடம் பெற வேண்டும். இது தொடர்பாக அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

நேற்று பிரிக்பீல்ட்ஸ்சில் உள்ள ருக்கூன் தெத்தாங்க மண்டபத்தில் சந்திப்பு கூட்டத்தின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தோசை,இட்லி, சப்பாத்தி, இடியாப்பம் போன்ற இந்திய பாரம்பரிய உணவு வகை ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது இனத்தின் உணவாக இருந்தாலும் அவை தற்போது நாட்டில் உள்ள மற்ற இனத்தவர்களையும் வெகுவாக கவரும் உணவுப் பொருட்களாக உள்ளன.

சொட்டி சனையர், நாசி லெமாக், ரோஜாக் போன்ற உணவு வகைகள் எல்லாம் மலேசிய தேசிய பாரம்பரிய உணவு வகைகள் பட்டியலில் சேர்த்துக் கொள்ள பட்டிருக்கின்றன. அதே போல தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளையும் அரசிதழ் மற்றும் பழஞ்சுவடி காப்பகம் ஆகியவற்றில் இடம் பெற செய்ய வேண்டும்.

அதே போல மலிலாட்டம், ஒயிலாட்டம்,கபடி, சிலம்பம், உறுமி போன்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளையும் கலை கலாச்சார நடனங்களையும் பழஞ்சுவடி காப்பகத்தின் பதிவேட்டில் இடம் பெற வேண்டியது அவசியம். இது தொடர்பாக கற்றுலா கலை கலாச்சார அமைச்சிடம் கோரிக்கை மனு சமர்பிக்கப்படும் என்று கூறிய ரிஷிகுமார், அடுத்து மலேசியாவில் பிரமாண்டமான முறையில் தமிழ் புத்தாண்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார். கோலாலம்பூர் பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியாவில் வரும் ஏப்ரல் 19 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் இரவு 9 மணி வரையில் இந்த விழா நடைபெறுகிறது.

சுமார் 5,000 பேர் இந்த விழாவில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். பார்வையாளர்களை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் இடம் பெறும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் தமிழர்களின் பாரம்பரியத்தையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படும்.

நாட்டின் முன்னணி இந்து இயக்கங்கள், புகழ் பெற்ற ஆலயங்கள், ஆசிரமங்கள் குருமார்கள், வணிகர்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த விழாவை நடத்துகின்றனர். மலேசிய சமூகத்தின் தமிழ் புத்தாண்டு பாரம்பரியம் மற்று கலாச்சாரம் குறித்த புரிதலை மேம்படுத்த வேண்டும் என்பதில் இந்த விழாவின் முக்கிய நோக்கமாகும்.

2026 ஆம் ஆண்டு மலேசியாவிற்கு வருகை தாருங்கள் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே ஒரு முன்னோட்டமாக இந்த விழா அமையும். மலேசியாவில் தமிழ் கலாச்சாரத்தின் செழுமை உலகிற்கு பறை சாற்ற வேண்டும். அனைத்துலக ரீதியில் சுற்றுலா பயணிகளை ஈர்த்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பது விழாவின் நோக்கமாகும்.

வீரமும் கலையும் சார்ந்த ஒருங்கிணைந்த சிலம்ப விளையாட்டு, உறுமி மேளம் ஆகியவை அனைவரையும் கவரும். பாதநாட்டியம் கரக ஆட்டம், மட்டுமின்றி சிறுவர்களையும் பெண்களையும் உற்சாகப்படுத்தும் உறி அடித்தல் மற்றும் கோலம் வரையும் போட்டிகளும் இடம் பெறும். கர்நாடகம், தேவாரம் மற்றும் தமிழிசை பாடல்களும் பாலையாக்களை கவரும். மேலும் தமிழர்களின் அறுகலை உணவு மற்றும் பானங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன என்றும் ரிஷிகுமார் கூறினார்.

மலேசிய இந்து சங்கம் செராஸ், செர்டாங் பேரவை இந்து தர்ம மாமன்றம் இணை ஏற்பாட்டில்

சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி விழா

எம். அன்பா

கோலாலம்பூர், ஜன. 17- மலேசிய இந்து சங்கம் செராஸ், செட்டாங் பேரவை, இந்து தர்ம மாமன்றம் இணை ஏற்பாட்டில் சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி விழா நடைபெற்றது. ஜனவரி 12ஆம் தேதி கூடந்த 10ஆம் ஆண்டாக பிரிக்பீல்ட்ஸ் விவேகானந்தர் ஆசிரமத்தில் விவேகானந்தர் ஜெயந்தி மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் மாணவர்கள் பலர் சுவாமி விவேகானந்தர் போல் உடை அணிந்து உற்சாகமாக பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் மலேசிய இந்து சங்கத்தின் செராஸ் வட்டாரப் பேரவைத் தலைவர் தொண்டர்மணி கலைமாமணி ராமையா சேவன், செடாங் வட்டாரப் பேரவைத் தலைவர் ஸ்ரீ சந்துரு கணேசன், மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் துணைத் தலைவர் ரிஷி ஜி, செயலவை உறுப்பினர்கள் சமய பிரிவுப் பொறுப்பாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.



MAKKAL OSAI 17-01-2025

தமிழர்களின் பாரம்பரிய உணவு, விளையாட்டு

அரசிதழில் இடம்பெற வேண்டும்

அரசாங்கத்திடம் மனு



(எஸ்.ஜீவராஜா)

தமிழர்களின் பாரம்பரிய உணவுகளும், விளையாட்டுகளும் அரசிதழில் இடம்பெற வேண்டும். அதே வேளை, பழஞ்சுவடி காப்பகத்தின் பதிவேட்டிலும் அவற்றை இடம்பெறச் செய்ய வேண்டும். இது தொடர்பாக அரசாங்கத்திடம் கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்படும் என்று தமிழ்ப் புத்தாண்டு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கின்றனர். வரும் 19 தேதி (ஏப்ரல்) சனிக்கிழமை கோலாலம்பூர், பிரிக்பீல்ட்ஸ், லிட்டல் இந்தியாவில் நடைபெறும் தமிழ்ப் புத்தாண்டு விழாவில் சுமார் 5,000 பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(விரிவான செய்தி பக்கம் 14)



5,000 பேர் திரண்ட தமிழ்ப்புத்தாண்டு

அரசிதழில் தமிழர்களின் பாரம்பரியம்

இடம்பெற பிரதமரிடம் மகஜர்

(எஸ்.ஜீவராஜா-ஆர்.குணா)

கோலாலம்பூர், ஏப். 20-

தமிழர்களின் பாரம்பரிய உணவுகளும், விளையாட்டுகளும் அரசிதழிலிலும் அதே வேளை, பழஞ்சுவடி காப்பகத்தின் பதிவேட்டிலும் இடம்பெறச் செய்ய வேண்டும் என வலியுறுத்தும் கோரிக்கை மனு நேற்று அரசாங்கத்திடம் வழங்கப்பட்டது என

பக்கம் 13

MAKKAL OSAI 23.04.2025



துணைத்தலைவர் டத்தோஸ்ரீ புலவேந்திரன் செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தினர். இந்த நிகழ்ச்சி முன்னாள் வீரர்களின் உற்சாகத்தையும் அவர்களுக்கான சமுதாய அங்கீகாரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. முன்னாள் வீரர்களின் குடும்பத்திற்கு நிதி உதவியும் வழங்கப்பட்டது.

புக்கிட் மெர்தாஜாமில்

ஆன்மீகமும் உடல்நலமும் ஒன்றிணைந்த விழா

செ.குணாளன்



பத்து கவான், ஏப்.23 -

மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் விஷ்ணு கோட்ட தலைவர், புக்கிட் மெர்தாஜா அருள்நிலையத் தலைவரும் தேசிய மகளிர் பிரிவுத் தலைவியுமான திருமதி இராஜலட்சுமி தலைமையில், புக்கிட் மெர்தாஜா இளைஞர் பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு மகத்தான ஆன்மீக நிகழ்ச்சி நடைபெற்றது. பிரார்த்தனையுடன் கூடிய தியானமும் மலை நோக்கிய நடைப்பயணமும் எனும் தலைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, உடல், உள நலனை பேணும் நோக்கில் அமைக்கப்பட்டது. இதனை, பிறை சட்டமன்ற உறுப்பினரும் பினாங்கு மாநில அட்சிக்குழு உறுப்பினருமான டத்தோஸ்ரீ கந்தராஜு சோமு தேசிய வந்து தொடங்கி வைத்தார்.

அவரது வாக்கமனிக்கும் உரை, நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் உந்துசக்தியாக அமைய, அர்த்தமுள்ள தொடக்கத்திற்கும் முக்கியப் பங்களிப்பாக இருந்தது.

மேலும், பினாங்கு மாநில உதவித் துணை முதல்வரின் சிறப்பு அதிகாரி டத்தோ மு. இராம்சந்திரன், புக்கிட் மெர்தாஜா ஸ்ரீ முனீஸ்வரர் கிவன், வரகி ஆலயத் தலைவர் டத்தோ தேவேந்திரன், பிறை ஐயப்ப மடத்தின் சுவாமிஜி உள்ளிட்ட பல பிரமுகர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்தனர். பங்கேற்ற அனைத்து உறவுகளுக்கும் எங்களின் உள்ளார்ந்த நன்றிகளையும் மனமார்ந்த பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். உங்கள் ஆற்றல், ஒழுக்கம், உற்சாகம் இந்த முயற்சிக்கு உயிரூட்டியது. இது, சுயவளர்ச்சி, சமுதாய நலனை நோக்கிய உங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. இளைஞர்களை ஆன்மீகத்திலும் உடல் நலத்திலும் வளர்ச்சியடைய ஊக்குவிப்பதே எங்கள் நோக்கம்.

இந்த நோக்கத்தை மதித்து, ஆதரித்து, எங்களுடன் இணைந்த அனைத்து உறவுகளுக்கும் வாய்ப்பாக எதிர்காலத்தில் மேலும் பல பயனுள்ள நிகழ்ச்சிகளை ஒன்றாக உருவாக்க உங்கள் ஒத்துழைப்பைப் எதிர்நோக்குகிறோம் என்று திருமதி இராஜலட்சுமி கூறினார்.

தமிழ்மலர் 28-07-2024

கெடா மாநில இந்து தர்ம மாமன்றத்தின் பொதுக்கூட்டம்

(தி.கிரிஷன்)

சுங்கை பட்டாணி,

ஜூலை 28 -

கடந்த 26/7/2024 வெள்ளிக்கிழமையன்று கெடா மாநில இந்து தர்ம மாமன்றத்தின் பொதுக்கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். இக்கூட்டம் மாலை 4 மணிக்குத் தொடங்கி மாலை 7 மணி வரை சமயக் காலம் நா. வீரையா தேவர் மண்டபத்தில் நடைபெற்றது.

மொத்தம் 21 பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்குச் சிறப்புப் பிரமுகர்களாக மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் தேசிய உதவித் தலைவரும் சமயக் கல்விக் குழுவின் துணைத்தலைவருமான ரமேஷ் வழி நடத்தினார்.

மலேசிய இந்து தர்ம மாமன்ற விஷ்ணுகோட் ஆலோசகர் கலியன் காளிமுத்து, கெடா மாநிலத்தமிழ்ப்பள்ளிகளின் தலைமையாசிரியர் கழகத் தலைவர் கார்த்திகேசு பெரியசாமி, கெடா மாநிலப் பணி நிறைவு பெற்ற தமிழ் ஆசிரியர் இயக்கத்தலைவர் மேம் சுப்ரமணியம், முன்னாள் விரிவுரையாளர் இராஜலிங்கம், முன்னாள் தலைமையாசிரியர் முனுசாமி முனியாண்டி புதிய சரித்திரம் இயக்கத்தின் பொறுப்பாளர் சுப்பிரமணியம் முன்னாள் இடைநிலைப்பள்ளி ஆசிரியர் மலர்க்கொடி, அருள் நிலையப் பொறுப்பாளர்களும், கெடா இந்து தர்ம மாமன்றத்தின் கீழ் சமய வகுப்பு நடத்தும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு கூட்டத்தினை மேலும் சிறப்பித்தனர்.

கெடா மாநிலத்திலுள்ள ஒவ்வொரு தமிழ்ப்பள்ளியிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள், வரும் 23, 24 ஆகஸ்ட் 2024, வெள்ளி, சனிக்கிழமைகளில் இந்துசமயப் பயிற்சிகளுக்காக அழைக்கப்படவுள்ளனர். இந்து தர்ம மாமன்றம் உருவாக்கியுள்ள "இந்து தர்மம்" என்கின்ற சமயப் புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல், சமயப் பாடங்களைப் பள்ளியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இந்த அறிவிப்பை மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் தேசிய உதவித் தலைவரும் சமயக் கல்விக் குழுவின் துணைத்தலைவருமான ரமேஷ் செயதார். தொடர்ந்து, ரமேஷ் ஒவ்வொரு பள்ளியிலும் சமயப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், அதை மேற்கொள்வதற்காகச் சமயக் கண்காணிப்புக் குழுவொன்றை ஏற்பாடு செய்யவே இக்கூட்டம் நடைபெற்று வந்ததையும் விளக்கினார். மேலும், இக்கூட்டத்தில் முன்னாள் தலைமையாசிரியர் முனுசாமி முனியாண்டி தமது கருத்தினைப் பதிவிட்டார். "500 மாணவர்கள் படிக்கும் இத்தமிழ்ப்பள்ளியில் 50 மாணவர்கள் மட்டுமே சமய வகுப்பிற்கு வருகின்றனர். அதிலும் முழுமையாக வருவதில்லை, இது வெற்றியல்ல, காரணம் 50 மாணவர்கள் எனின் 50 மாணவர்களின் வருகையைப் பள்ளி நிர்வாகம் உறுதி செய்வதுதான் சரியானவை, அப்பொழுதான் அனைத்து மாணவர்களிடமும் சமயக் கல்வியைக் கொண்டு சேர்க்க முடியும் என்றார்.

"தமிழ்ப்பள்ளிகளில் சமயக் கல்வியைக் கொண்டு வருவதற்குப் பலவித புறச்சிக்களும் சிக்கல்களும் ஏற்படும். ஆகவே, அரசாங்கத்தின் அனுமதியுடனும் அதற்கானத் தகுந்த ஆவணங்கள், கழகங்கள் போன்றவற்றை வைத்திருப்பின் தமிழ்ப்பள்ளிகளில் சமய வகுப்பினை எவ்வித சிக்கலுமின்றி முறையே மேற்கொள்ள இயலும்.

நாம் மேற்கொள்கின்ற முயற்சிதனைச் சரியான வழிமுறைகளுடன் மேற்கொண்டால் செய்கின்ற காரியமானது நிச்சயமாக வெற்றியடையும் என்று கெடா மாநிலத் தமிழ்ப்பள்ளிகளின் தலைமையாசிரியர் கழகத் தலைவர் கார்த்திகேசு பெரியசாமி, கூறினார்.



Scanned with CamScanner





முதல் பக்கத் தொடர்ச்சி

5,000 பேர் திரண்ட தமிழ்ப்புத்தாண்டு...



தமிழ்ப் புத்தாண்டு விழா ஏற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளரும் இந்து தர்ம மாமன்றத்தின் துணைத் தலைவருமான ரிஷிகுமார் வடிவேலு கூறினார்.

நேற்று சனிக்கிழமை கோலாலம்பூர், பிரிக்பீல்ட்ஸ், லிட்டல் இந்தியாவில் சுமார் 5,000 பேர் கலந்து கொண்ட தமிழ்ப் புத்தாண்டு விழாவில் பிரதமரின் சிறப்பு அதிகாரி சண்முகம் மூக்கனிடம் இந்த கோரிக்கை மனு வழங்கப்பட்டது. தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் விளையாட்டுகள் பற்றிய அனைத்து விவரங்களையும் அரசாங்கத்தின் அரசிதழில் இடம் பெற செய்ய வேண்டும். அதே வேளை, வருங்கால தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பழஞ்சுவடி காப்பகத்தின் பதிவேட்டிலும் அவை இடம் பெற வேண்டும் என வலியுறுத்தி இந்த மனு வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் மலேசிய சுற்றுலா காலண்டரிலும் தமிழ்ப் புத்தாண்டு விழா இடம் பெற வேண்டும். இக்கோரிக்கைகளை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தோசை, இட்லி, சப்பாத்தி, இடியாப்பம் போன்ற இந்திய பாரம்பரிய உணவு வகை ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது இனத்தின் உணவாக இருந்தாலும் அவை தற்போது நாட்டில் உள்ள மற்ற இனத்தவர்களையும் வெகுவாக கவரும் உணவாக உள்ளன.



ரொட்டி சானாய், நாசி லெமாக், ரோஜாக் போன்ற உணவு வகைகள் எல்லாம் மலேசிய தேசிய பாரம்பரிய உணவு வகைகள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதே போல தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளையும் அரசிதழ் மற்றும் பழஞ்சுவடி காப்பகம் ஆகியவற்றில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

அதே போல மயிலாட்டம், ஒயிலாட்டம், கபடி, சிலம்பம், உறுமி போன்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளையும் கலை கலாச்சார நடனங்களையும் பழஞ்சுவடி காப்பகத்தின் பதிவேட்டில் இடம் பெற வேண்டியது அவசியம் என்பதே இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களின் முதன்மை நோக்கமாகும்.

இது தொடர்பாக சுற்றுலா கலை கலாச்சார அமைச்சிடம் இந்த கோரிக்கை மனு சமர்பிக்கப்படுவதற்கு ஏதுவாக பிரதமரின் சிறப்பு அதிகாரி சண்முகம் மூக்கனிடம் வழங்கப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

சுமார் 5,000 பேர் கலந்து கொண்ட இவ்விழாவில் பார்வையாளர்களை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் தமிழர்களின் பாரம்பரியத்தையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

நாட்டின் முன்னணி இந்து இயக்கங்கள் , புகழ்ப் பெற்ற ஆலயங்கள், ஆசிரமங்கள், குருமார்கள், வணிகர்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த விழாவை வெகு விமரிசையாக நடத்தினர். மலேசிய சமூகத்தின் தமிழ்ப் புத்தாண்டு பாரம்பரியம் மற்று கலாச்சாரம் குறித்த புரிதலை மேம்படுத்த வேண்டும் என்பதே இந்த விழாவின் முக்கிய நோக்கமாகும்.

2026 ஆம் ஆண்டு மலேசியாவிற்கு வருகை தாருங்கள் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே ஒரு முன்னோட்டமாக இந்த விழா அமையும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே வீரமும் கலையும் சார்ந்த ஒருங்கிணைந்த சிலம்ப விளையாட்டு, உறுமி மேளம் ஆகியவை அனைவரையும் கவர்ந்தது. பரதநாட்டியம் கரகாட்டம், மட்டுமின்றி சிறுவர்களையும் பெண்களையும் உற்சாகப்படுத்தும் உறி அடித்தல் மற்றும் கோலம் வரையும் போட்டிகளும் இடம் பெற்றதோடு தமிழர்களின் அறுசுவை உணவு மற்றும் பானங்கள் இலவசமாக வருகையாளர்களுக்கு வழங்கப்பட்டதாக ரிஷிகுமார் தெரிவித்தார்.

தமிழ்ப்பள்ளி தோறும் மாணவர்கள் திருமுறை ஓதுவதை கட்டாயமாக்க வேண்டும்



(நாகேந்திரன் வேலாயுதம்)

மாசாய், ஆக. 28-

தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்வாழ்த்து பாட தடை இல்லை என இவ்வாண்டு தொடக்கத்தில் கல்வி அமைச்சர் ஃபட்லினா சிடேக் கூறியிருந்தார்.

அதே போன்று தமிழ்ப்பள்ளிகள் தோறும் ஏற்பாடு செய்யப்படும் மாணவர்களுக்கான நடவடிக்கைகள் தொடக்க நிகழ்வாக திருமுறை ஓதுவது அல்லது தேவாரம் பாடுவதை கட்டாயமாக்க வேண்டும் என ஆ. சக்திவேல் கல்வி அமைச்சரை கேட்டுக்கொண்டார். இந்து மாணவர்களுக்கு திருமுறை விழா போன்ற சமய கல்வியை உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளை அடிக்கடி நடத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இன்றைய மாணவர்கள் நாளைய இளைஞர்கள். தீய வழிக்கு கொண்டு செல்லாமல் இருப்பதற்கு வழி வகுக்கும் என மலேசிய இந்துதர்ம மாமன்றம், ஜொகூர் ஜெயா அருள் நிலைய ஆலோசகருமான் சக்திவேல் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆரம்பநிலை மாணவர்கள் இடைநிலைப் பள்ளிப் படிப்பை எதிர் நோக்கும் இவர்கள் மதம் மாறாமல் இருப்பதற்கு இதுபோல ஆன்மிக நிகழ்ச்சிகள் நடத்தி வருவதன் மூலம், இதுப்போன்ற அறியாமை போக்கிலிருந்து தடுக்க முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இப்பொழுது பள்ளிகளிலே மதம் மாற்றம் அடிக்கடி நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டிய சக்திவேல், அச்செய்கையை வன்மையாக கண்டித்தார். ஆரம்ப நிலை பள்ளி மாணவர்களுக்காக மிகச் சிறப்பாக நடந்தேறிய இந்த திருமுறை விழாவை ஜொகூர், ஜொகூர் ஜெயா அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயமும், மலேசிய இந்துதர்ம மாமன்றம் ஜொகூர் ஜெயா அருள் நிலையமும் இணைந்து மிகச் சிறப்பாக நடத்தின. இந்நிகழ்ச்சியில் ஜொகூர் ஜெயா சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 90 மாணவர்கள் கலந்து கொண்டனர்



தமிழ் மலர் Tamil Malar
28-08-2024, Page 11

கெடா மாநில இந்துதர்ம ஆசிரியர் பயிலரங்கு

தி.கிரிஷன்

சுங்கை கோப், ஆக. 28-

இந்து சமய ஆசிரியர்களுக்கும் சமய வகுப்பு நடத்த ஆர்வமுள்ளவர்களுக்கும் இந்துதர்ம ஆசிரியர் பயிலரங்கு, கடந்த வெள்ளி, சனிக்கிழமையன்று கெடா மாநிலத் தமிழ்ப்பள்ளி, இடைநிலைப்பள்ளி சுங்கை கோப் மலைச்சாரல், பிரம்ம வித்யாரண்யத்தில் நடைபெற்றது.

தமிழ்ப்பள்ளித் தலைமையாசிரியர்கள், துணைத்தலைமையாசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஆலயப் பொறுப்பாளர்கள், ஆசிரியர் கல்விக் கழக மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கெடா மாநிலப் பணி நிறைவு பெற்ற தமிழாசிரியர் இயக்கத்திலிருந்து சிலரும், மழலையர் பள்ளி ஆசிரியர்கள் , கூலிம் இந்து சங்க உறுப்பினர்கள் சிலர் என 80க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

"இங்கு கற்பிக்கப்படும் சமயப் பாடங்களை ஆசிரியர்கள் பள்ளிக்குச் சென்று மாணவர்களுக்குக் கற்பிப்பதால் நம் இந்திய மாணவர்கள் இடைநிலைப்பள்ளிகளுக்கும் உயர்கல்விக்கூடங்களுக்கும் செல்லும் போது தெளிவான சமய அறிவைப் பெற்றிருப்பதால் மதமாற்ற சிக்கல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்ள வழி பிறக்கும். ஆகவே, அடிப்படை இந்து சமயத்தை மாணவர்களுக்குக் கற்பிப்பது மிகவும் அவசியமாகும். அதற்கான தொடக்க முயற்சிதான் இந்து தர்ம ஆசிரியர் பயிலரங்கு

" என்று வலையொளி ஊடக நிருபர் மேற்கொண்ட பேட்டியில் மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் தேசியத் தலைவர் இராதா கிருஷ்ணன் அழகுமலை தமது கருத்தினைப் பதிவிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், கெடா மாநிலத்தில் பல சமய இயக்கங்கள் தொடர்ந்து சமய வகுப்புகளை நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், அவர்களுக்கு ஆதரவளிக்கும் வண்ணம் இன்றைய பயிற்சி நடைபெறுகின்றது என்றார்.

"இந்து தர்ம மாமன்றம் உருவாக்கியுள்ள இந்து சமயக் கல்விப் பாடத்திட்டம், இந்து தர்மம் 2,3,4,5,6 பாடநூல்கள், இந்து தர்ம கற்பித்தல் பயிற்சி, ஆசிரியர் கையேடு, பிரார்த்தனைக் கோவை முதலியவற்றின் வழி ஆசிரியர்கள் சமயக் கல்வியினை எளிய முறையில் கற்பிக்கவும் மாணவர்கள் மகிழ்வுடன் சமயத்தை விரும்பிக் கற்கவும் எளிமையாகவும் மிகத் துல்லியமாகவும் மாணவர்களுக்குக் கற்றுத் தரும் நோக்கத்தில் நாடு தழுவிய நிலையில் ஆசிரியர்களுக்கு இத்தகைய பயிலரங்குகளின் வழி பயிற்சிகளை வழங்கி வருகிறோம், என மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் தேசியக் கௌரவப் பொதுச் செயலாளர் சுப்பிரமணி சோணையா ஊடக நிருபர் மேற்கொண்ட பேட்டியில் தமது கருத்தினைப் பதிவிட்டார்.

இன்று இச்சமயப் பயிலரங்கில் கிடைத்த விடயங்களை இங்கேயே விட்டுவிடாமல் பள்ளிக்குச் சென்றவுடன் மற்ற ஆசிரியர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் பள்ளியில் சமய வகுப்பினை அமல்படுத்த வேண்டும் என்றும் கெடா மாநிலத் தலைமையாசிரியர் மன்றத் தலைவர் கார்த்திகேசு தமது கோரிக்கையினை விடுத்தார்.

மேலும், அவர் தமதுரையில் கலந்து கொண்ட அனைத்துத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களையும் வெகுவாகப் பாராட்டினார். நிறைவாக, கலந்து கொண்ட பயிற்சி ஆசிரியர்களுக்குச் நற்சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.





தமிழ் மலர் Tamil Malar
28-08-2024, Page 6

மலேசிய இந்து தர்ம மாமன்ற நடராஜர் கோட்டம்
மாநில அளவிலான திருமுறை ஓதும் விழா



நாகேந்திரன் வேலாயுதம்

சிரம்பான், செப்.27-

மலேசிய இந்து தர்ம மாமன்றம் நெகிரி செம்பிலான் மாநில நடராஜர் கோட்டம் ஏற்பாட்டில் தாமான் ஸ்ரீ மாவார் அருள்நிலைய ஆதரவுடன் மாநில அளவிலான திருமுறை ஓதும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சிரம்பான் தோட்டத் தமிழ்ப்பள்ளியில் நடைபெற்ற பல்வேறு பிரிவுகளுக்கான இப்போட்டியில் நெகிரி செம்பிலான் மாநிலத்திலுள்ள ஏழு அருள் நிலையங்கள் தங்கள் போட்டியாளர்களை களமிறக்கின.

பல்வேறு பிரிவுகளுடன் நடைபெற்ற இப்போட்டியில் தனிநபர் திருமுறை ஓதும் போட்டியில், பிரணவன் திருநாவுக்கரசு, நிஷிகா ஜெகநாத், விஸ்ணிஷா ஈஸ்வரன், சாங்ஹ்ரிஷாலினி சந்திரன், யோகதரணி ஆகியோர் முதல் நிலையில் வெற்றி பெற்றனர்.

இதனிடையே திருமுறை குழுப் போட்டியில் பண்டார் ஸ்பிரிங்ஹரில் அருள் நிலையம் முதல் நிலையினும், இரண்டாவது நிலையில் ஸ்ரீ மாவார் அருள் நிலையம், மூன்றாவது நிலையில் சிரம்பான் அருள் நிலைய குழுக்கள் வென்றன.

இதனிடையே குழு ரீதியான புதிர்ப் போட்டியில் பகாவ் அருள் நிலையம் வெற்றி பெற்ற வேளையில், இரண்டாம், மூன்றாம் இடங்களை லாபு அருள் நிலையம், ஸ்ரீ மாவார் அருள் நிலையம் வென்றன.

பஞ்சபுராணம் பதிகப் பாராயணம் வாசித்தல் போட்டியில் தனிநபர் பிரிவில் பிரேம்குமார் மற்றும் யோகராணி சங்கம் ஆகியோர் முதல் நிலையில் வெற்றி பெற்ற வேளையில், பேச்சுப் போட்டியில் தனேஷ் முதல் நிலையில் வெற்றி பெற்றார்.

இப்போட்டியை நிறைவு செய்துவைத்து பேசிய சிரம்பான் ஜெயா சட்டமன்ற உறுப்பினர் பி.குணா, இந்து சமூகத்தினரை சார்ந்த ஒவ்வொருவரும், அவர்கள் சார்ந்த சமய திருமுறைகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அதே வேளை சமய விழாக்களில், குடும்ப நிகழ்வுகளில், குறிப்பாக இறப்பு காரிய பிராத்தனைகளின் போது, சமய திருமுறை பாடலை பாட வெகுகாலம் போக்கை முதலில் கைவிட வேண்டும் என குணா கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய மலேசிய இந்து தர்ம மாமன்ற தேசியத் தலைவர் ராதாகிருஷ்ணன், இடைநிலைப்பள்ளிகளில் இந்து மாணவர்களை மதம் மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தொடர் புகார்களை பெற்று வருகிறோம்.

இவ்விவகாரத்தில் பெற்றோர்கள் விழிப்பு நிலையில் இருக்க வேண்டும் என்றும், நமது பிள்ளைகளுக்கு இந்து சமய அறிவை புகுத்துவதில் பெற்றோர்கள் முழுக் கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவில் தமிழ் மலர் செய்தியாளர்கள் மாரியப்பன் காளியப்பன், நாகேந்திரன் வேலாயுதம், எழுத்தாளர் எம்.கருணாகரன் மேலும் பிரமுகர் சிலரும் சிறப்பிக்கப்பட்டனர்.



TheStar | Subscriptions | Log In

TOPICS: Tariff Wars | ASEAN 2025 | Flood Alert >

Tamil festival brings culture to life in KL

METRO NEWS

Wednesday, 30 Apr 2025



Home | For You | Bookmark | Audio | Search

AST NEWS

Home › Malaysia

MALAYSIA

🎉 பிரிக்பீல்ட்ஸ் லிட்டில் இந்தியாவில் சித்திரைத் திருநாள் – தமிழ் புத்தாண்டு கலை விழா!

April 22, 2025

3186



Home > சமூகம் > பஹல்கம் பயங்கரவாத தாக்குதல்: பாதிக்கப்பட்டோருக்காக தலைநகரில் சிறப்பு பிரார்த்தனை!

சமூகம் மலேசியா

பஹல்கம் பயங்கரவாத தாக்குதல்: பாதிக்கப்பட்டோருக்காக தலைநகரில் சிறப்பு பிரார்த்தனை!

By தா.சரளா தேவி - April 26, 2025 212



கோலாலம்பூர் ஏப். 26.ஜம்மு- காஷ்மீர் பஹல்காம் சுற்றுலாப் பகுதியில் செவ்வாய்க்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

malaysiakini
terkini untuk anda



BERITA

NGO Hindu minta PMO tubuh badan kawal selia kuil

Zarrah Morden
Diterbitkan: Apr 6, 2025 4:24 PM · Dikemaskini: 4:24 PM

ADS

Persatuan Hindu Malaysia (MHS) hari ini menyerahkan satu memorandum kepada Pejabat Perdana Menteri (PMO) bagi memohon penubuhan sebuah badan kawal selia.

நம்பிக்கை செய்திகள்

Tel : +673 2444817 ROKIYAH SDN. BHD.
Fax : +673 2444819 Whole Sale Paper Merchant
Unit 4, Block B, Ground Floor, Latifuddin Complex, Tungku Link, Gadong BE3919 Brunei Darussalam



செய்திகள் ➔ மலேசியா

By | Published: April 6, 2025, 4:55 pm

பகிர்

ஆலய ஒழுங்குமுறை அமைப்பை அமைக்க பிரதமர் துறைக்கு மலேசிய இந்து சங்கம் கோரிக்கை

Alai Osai NEWS

Malaysia

வங்காள தேசத்தில் சிறுபான்மையருக்கு எதிரான கொடூரம் கண்டிக்கத்தக்கது!

By admin December 23, 2024 105 0



கோலாலம்பூர் டிச 23
வங்காள தேசத்தில் சிறுபான்மை இந்துக்களுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என

நம்பிக்கை செய்திகள்

RSA ENGINEERING
Our Services
Interior Designing & Build | Mechanical & Electrical | Built-in Furnishing
Building Management | ACMV | Civil & Structure



செய்திகள் ➔ மலேசியா

By | Published: September 18, 2024, 5:47 pm

பள்ளிகளில் சமயக் கல்வியை அமல்படுத்தும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்க



Postpone the Mufti Bill

K PRAGALATH - October 21, 2024

Malaysian Coalition of Hindu NGOs and Temples hopes that the government would postpone the tabling of the Mufti (Federal Territories) Bill 2024 which is scheduled to be tabled in the current Dewan Rakyat session.

"We urge the government to postpone the tabling of the Mufti Bill temporarily and host consultation and negotiations for the bill at the soonest.

நம்பிக்கை செய்திகள்

RSA ENGINEERING
Our Services
Interior Designing & Build | Mechanical & Electrical | Built-in Furnishing
Building Management | ACMV | Civil & Structure



செய்திகள் ➔ மலேசியா

By | Published: February 4, 2025, 1:17 pm

தைப்பூச விழாவில் கடைப்பிடிக்க வேண்டிய சமய நெறிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது தான் கந்தன் காவடி திட்டம்: செனட்டர் சரஸ்வதி

கோலாலம்பூர்:

தைப்பூச விழாவில் கடைப்பிடிக்க வேண்டிய சமய நெறிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது தான் கந்தன் காவடி திட்டமாகும்.

தேசிய ஒருமைப்பாட்டு துறை துணையமைச்சர் செனட்டர் சரஸ்வதி கந்தசாமி இதனை கூறினார்.

தைப்பூச விழா மிகப் பெரிய சமய விழாவாக விளங்குகிறது. அதிகமான இளைஞர்கள் பங்கெடுக்கும் விழாவாகவும் இது விளங்குகிறது.

இளைஞர்கள் அதிகம் பங்கேற்பதால் இவ்விழாவில் நமது சமயம், கலை, கலாச்சாரம், பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக காவடிகள் எடுத்து நேர்த்திக் கடனை பூர்த்தி செய்யும் போது நமது சமய மரபுகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தைப்பூச விழாவிற்கு சம்பந்தம் இல்லாத காவடிகளை எடுத்து வருவதை தடுக்க வேண்டும்.

இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் தான் இந்த கந்தன் காவடி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மலேசிய இந்து தர்ம மாமன்றம், ஸ்ரீ ராதாகிருஷ்ணன் பைன் ஆர்ட்ஸ் அகாடமியின் ஒத்துழைப்புடன் இத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

முதல் கட்டமாக வரும் ஜனவரி 7ஆம் தேதி பண்டமாரானில் சிறப்பு பட்டறை நடைபெறவுள்ளது.

தோள் காவடி செய்வது எப்படி. எவ்வாறான காவடிகள் எடுப்பது. 48 நாட்கள் விரதம் உட்ப எவ்வாறான சமய நெறிகளை பின்பற்று என அனைத்தும் இப்பட்டறையில் விளக்கம் அளிக்கப்படும்.

இது ஆரம்பம் தான். தைப்பூசத்தை தவிர்த்து பங்குனி உத்திரம் என அனைத்து விழாக்களுக்கும் இப்பட்டறைகள் பொருந்தும் என்பதால் இது தொடர்ந்து நடைபெறும்.

கந்தன் காவடி என்று புதிய திட்டமா என்று பல கேள்விகள் எழலாம்.

பள்ளிகளில் சமயக் கல்வியை அமல்படுத்தும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாம்: ராதாகிருஷ்ணன்

ஷாஆலம்:

தமிழ், இடைநிலைப் பள்ளிகளில் சமயக் கல்வியை அமல்படுத்தும் முயற்சிகளுக்கு யாரும் முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாம்.

மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் தலைவர் ராதாகிருஷ்ணன் இதனை வலியுறுத்தினார்.

மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் ஏற்பாட்டில் இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான 5 நாள் இந்து தர்ம அடிப்படை சமய வகுப்பு மிட்லன்ட்ஸ் தமிழ்ப்பள்ளியில் நடைபெற்றது.

கிட்டத்தட்ட 100 மாணவர்கள் இந்த வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்த வகுப்புகளை பள்ளிகளில் நடத்த வேண்டும் என்பது தான் மலேசிய இந்து சங்கத்தின் போராட்டமாக உள்ளது.

இதற்கான பாடப் புத்தகங்களும் தயார் நிலையில் உள்ளது. ஆனால் இம் முயற்சிக்கு வெற்றி கிடைக்காமலே உள்ளது.

குறிப்பாக இத்தகு முயற்சிக்கு முட்டுக் கட்டையாக இருப்பவர்களும் நம்மவர்கள் தான் என்று நினைக்கும் போது வேதனையாக உள்ளது.

இருந்தாலும் இம்முயற்சியை மலேசிய இந்து தர்ம மாமன்றம் என்றைக்கும் கைவிடாது என்று அவர் கூறினார்.

இதனிடையே இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான 5 நாள் இந்து தர்ம அடிப்படை சமய வகுப்பு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பலர் ஒத்துழைப்பை தந்துள்ளனர்.

இந்த ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் நன்றி என்று ராதாகிருஷ்ணன் கூறினார்.

By **ஆர்.தசரதன்**

AUG 25, 2024



Share 0 Shares

தி.கிரிஷன்

சுங்கை கோப், ஆகஸ்ட் 26 – கடந்த வெள்ளி, சனிக்கிழமையன்று கெடா மாநிலத் தமிழ்ப்பள்ளி, இடைநிலைப்பள்ளி இந்து சமய ஆசிரியர்களுக்கும் சமய வகுப்பு நடத்த ஆர்வமுள்ளவர்களுக்கும் இந்துதர்ம ஆசிரியர் பயிலரங்கு, சுங்கை கோப் மலைச்சாரல், பிரம்ம வித்யாரண்யத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நம்பிக்கை செய்திகள்

IRSA
Our Services
Interior Designing & Build | Mechanical & Electrical | Built-in Furnishing
Building Management | ACMV | Civil & Structure



செய்திகள் → மலேசியா

By | Published: September 18, 2024, 5:53 pm

ஆலயம் கட்டி விட்டால் மட்டும் போதாது; வழிபட பக்தர்கள் தேவை: கணபதிராவ்

ஷாஆலம்:

நாட்டில் பெரிய அளவில் ஆலயம் கட்டினால் மட்டும் போதாது வழிப்பட பக்தர்கள் தேவை.

கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. கணபதிராவ் இதனை வலியுறுத்தினார்.

மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் ஏற்பாட்டில் இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான 5 நாள் இந்து தர்ம அடிப்படை சமய வகுப்பு மிட்லன்ட்ஸ் தமிழ்ப்பள்ளியில் நடைபெற்றது.

இதுவொரு மகத்தான வகுப்பாகும். ஒவ்வொரு இந்துக்களும் கட்டாயம் செல்ல வேண்டிய வகுப்பு இதுவாகும்.

இதுபோன்ற சமய வகுப்புகளை ஆலயங்கள் நடத்த வேண்டும்.

தற்போது நாட்டில் ஆலயங்களை யார் பெரிதாக கட்டுவது என்ற போட்டி தான் நடக்கிறது.

உண்மையில் பெரிய அளவில் ஆலயம் கட்டினால் மட்டும் போதாது வழிப்பட பக்தர்கள் தேவை.

குறிப்பாக சமய விழிப்புணர்வு நிகழ்வுகளை ஆலயங்கள் அதிகரிக்க வேண்டும்.

மக்களிடையே சமய விழிப்புணர்வு இருந்தால் நம் சமயத்தை யாராலும் இழிவுபடுத்த முடியாது.

ஆகையால் சமுதாய மக்கள் முழு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று கணபதிராவ் கூறினார்.

- பார்த்திபன் நாகராஜன்

ஆலயம் கட்டி விட்டால் மட்டும் போதாது; வழிபட பக்தர்கள் தேவை: கணபதிராவ்

malaymail



MALAYSIA / *17 h ago*

Klang fatal shooting: 'I thought it was a crow-shooting operation,' says witness after man found dea...

MOST READ

With yellow flowers, Indian NGOs perform religious rites at Jln Masjid India to aid search for KL sinkhole victim



A group from Malaysia Hindu Sanggam and Hindu Darma Mamandram perform religious rites at the site of the sinkhole incident at Jalan Masjid India, Kuala Lumpur August 28, 2024. —

FOCUS MALAYSIA

JustMarkets Join JustMarkets IB Program
Up to $25 per lot Daily payouts Automated rebate system
JOIN NOW

Malaysian Hindu NGO 'emulates' "Free Palestinian" rally to hold solidarity prayer for Bangladeshi Hindus, minorities

By FocusM | 20/08/2024 | in Mainstream , Top



THE Malaysia Hindu Dharma Maamandram staged a solemn prayer session was at Sri Sivan Alayam